
# மனிதம்



இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெயர்ந்தோருக்கான விசேட செயற்திட்டம்

(அனுசரணை: **UNHCR**)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Acknowledgment

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இடம் பெயர்ந்தோருக்கான விசேட செயற்திட்டத்தினால் சர்வதேச மனித உரிமைகள் தினத்தை ஒட்டி கவிதைப்போட்டிக்காக தங்களது ஆக்கங்களை ஊக்கமாக எமக்கு அனுப்பி வைத்த கவிஞர்கள் அனைவருக்கும் அதனை நடுநிலைமை தவறாது பரிசுக்கவிதைகளை தேர்ந்து எடுத்துத்தந்த மத்தியஸ் தருக்கும், மற்றும் நாம் நேரில் சென்று கேட்டபோது மறுக்காது மிகக் குறுகிய காலத்தினுள் கவிதைகளை எழுதி வழங்கிய பெரியோருக்கும் மற்றும் மிகவும் குறுகிய காலத்தினுள் நாம் விரும்பியவாறு முன் முன்பக்க அட்டை தொடங்கி, இறுதிப்பக்கம் வரை அனைத்தையும் செம்மையுறச் செய்துதவிய 'ஹரிஹரணன் பிறிண்டேர்ஸ்' ஸ்தாபனத்தாருக்கும் மற்றும் இப்புத்தகம் வெளிவரு வதற்காக எமக்குப் பலவகைகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது நன்றிகள்.

*ஆர்.பி.சந்திரசேகர.*
*பிராந்திய இணைப்பாளர்.*
*இ.ம.உ.ஆ.*
*யாழ்ப்பாணம்.*

*வேழினி.*
*செயற்திட்ட அதிகாரி.*
*இ.பெ.வி.செ.*
*இ.ம.உ.ஆ.*
*யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேட்டுப் பெற்றவை

### மனித உரிமை வளர்வதற்குச் செய்வது?

ஆறறிவு மனிதனாய்ப் பிறப்பதற்காய்
அரியதவம் முன்னையிற் செய் திருக்கவேண்டும்
பேறுடனே பிறந்து விட்டால் பிறர்க்கும் தமக்கும்
பேணுகின்ற நீதியிலே வாழவேண்டும்
மாறுபடும் நீதியிலே ஒருவன் வாழ்ந்தால்
மனிதசமு தாயத்தில் வாழமாட்டான்
தேறுகின்ற மனிதனவன் ஆகமாட்டான்
தேசத்தின் நன்மைகளைக் கருதமாட்டான்

பண்புடனே நல்லொழுக்கம், சமுதாயத்தில்
பற்று, மனு நீதி நேர்மைச் சிறப்பு
பெண்களென்றும் ஆண்களென்றும் மெலியோரென்றும்
பேசுகின்ற வலிமையெலாம் உடையோரென்றும்
மண்ணகத்தே உயர்ந்தோர்கள் தாழ்ந்தோ ரென்றும்
வகுத்துவிடும் மனிதனிடம் சமரசத்தின்
திண்மையில்லை தெளிவுமில்லை மனித நேயச்
சீரில்லை அவனிடத்தே தர்மமில்லை.

ஆகையால் இவற்றை யெல்லாம் தெளிந்துகொண்டு
ஆருயிர்கள் அத்தனையும் பார்க்கும் நெஞ்சில்
ஆகியதன் னிலைபோல மற்றவர்க்கும்
ஆற்றுகின்ற பெரும்பணியே மனிதநேயத்
தாகமுயர் பணியாகும், மற்றவர்தம்
தனியுரிமைச் சமத்துவமும் மலர்ந்துநிற்கும்.
நாகரிக நல்மனித உரிமை எங்கும்
நடைமுறையில் மலர்வதற்குச் செங்கோலாகும்



*அருட்கவி சீ. விநாசித்தம்பி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் மனிதருக்கானவை

மனித உரிமைகள் மதிப்பு வாய்ந்தவை
புனித மானவை போற்றற் குரியவை

பேசுதற் குரிமை வேண்டும்
எழுதுதற் குரிமை வேண்டும்
கூடிட, கூட்டம் போட்டுக்
கொள்கையை விளக்கம் செய்ய
நாடிது என்தாய் நாடென்(று)
உரிமை கொண்டாட ஒன்று
ஆடவர் மகளிர் பேதம்
அற்று எல்லாம் அநுபவிக்க!

தாய்மொழி மூலம் கல்வி
கற்பதற் குரிமை : எங்கும்
போய்வர உரிமை: மற்றும்
பொருத்தமாய் அரசாங் கத்தை
தேர்தலின் மூலம் மாற்றும்
சிறந்த வாக்குரிமை - எல்லாம்
தூயவை - இவைகள் வாய்த்தால்
சுதந்திர வாழ்க்கை உண்டு!

சித்திர வதை செய்யாத
காவலர் வேண்டும், எங்கள்
சொத்தினை அதிகா ரத்தால்
சுறண்ட ஒண்ணாத மேலாம்
பத்திர வாழ்வு வேண்டும்
பட்டினி கிடந்து யாரும்
செத்தனர் என்ற செய்தி
செவிவிழா உரிமை வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதியின் பேரால் மற்றும்
சமயத்தின் பேரால் மக்கள்
ஏதும் முன்னுரிமை நாடா
இலட்சிய வாழ்க்கை வேண்டும்!
மாதர்வன் முறைக்கா ளாகும்
வழக்கம் போய் ஒழிய, இங்கே
நீதியின் முன்னே யாரும்
நிகரென முழக்கம் செய்வோம்!

பாலகர் பசியால் வாடிப்
பட்டினி கிடந்தார் என்றும்
வேலை செய் கின்றார் என்றும்
வாழ்வை வீணாக்கிக் கொண்டு
சீரழிகின்றார் என்றும்
செய்திகள் கேட்டோம் ; எங்கள்
வேரறு முன்னே நாங்கள்
விழித்தெழுந் துரிமை காப்போம்!

மனித உரிமைகள் மதிப்பு வாய்ந்தவை
புனித மாணவை, போற்றற் குரியவை



சோ.பத்மநாதன்
(சோ.ப)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை ஆணையம்

மனிதனை மனிதன் மதித்து
வாழும் நெறிகளைக் கூறி
புனிதப் படுத்தும் நல்ல
புத்த கங்கள் படித்தும்
இனிதாக மற்றவர்க் கிடைஞ்சல்
இல்லாது வாழ மறுக்கும்
மனிதரைத் திருத்தி எடுக்கும்
மனித உரிமைக் கழகம்

தோன்றும் போதே சகல
சுதந்திரத் தோடும் தோன்றி
ஆன்ற புலநுகர் கலைகள்
அறிவு சுயமரி யாதை
ஈன்றநற் குணங்களைப் பெற்று
எல்லோரும் இன்புற வாழ்ந்து
மாண்புறச் செய்வது ஒன்று
மனித உரிமைக் கழகம்


நீதி நியாயங்கள் வேறு
நிறைவேற்றுஞ் சட்டம் வேறாய்
பேதித்து மனிதத்தை அழிக்க
பிறந்தால் அதனை விளக்கி
பாதித்த மனிதனின் பக்கம்
பரிந்து நின்று பேசி
சாதித்து நியாயம் வழங்கும்
சதுரப் பாடுள்ள சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றுக்கு வேலி போட்டு
கடலுக்கு அணை கட்டி
மாற்றங்கள் செய்து வானும்
மழையும் தனதென்று விற்று
ஏய்த்துப் பிளைப்பார் அஞ்சும்
எதிர்மனித உரிமைக் கழகம்
வாய்த்த ஆணையம் இதனை
வாழிய! வாழிய!! என்போம்.

தந்தையைப் போற்றாத் தனையன்
தனையனை வருத்துந் தந்தை
சொந்தத் துணையை நிதமும்
துயரஞ் செய்சதி பதிகள்
எந்தத் தரத்தின ரூந்தம்
இடர்தீர்க்க வாய்ப்புள தான
மந்திர நிலையம் இந்த
மனித உரிமை ஆணையம் அன்றோ.



தில்லைச்சிவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பரிசு பெற்ற கவிதை-1

## சிறுவர் உரிமைகள்

சின்னஞ் சிறிய சிறுவர் எம்மை
சிறந்த சொத்தாய் நினைத்திருக்கும்
பென்னம் பெரிய பெரியவர் நீர்
பெற்றுத் தருவீரோ எம் உரிமையினை.

அன்னை மடியில் தவழ்ந்திருந்து
ஆனந்தத் தாலாட்டில் கண்வளர்ந்து
அன்புக் காற்றில் அகம் மலர்ந்த
அந்த இனிமை எமக்கேனில்லை?

பாட்டி சொல்லும் கதை கேட்டு
தாத்தா முதுகில் சவாரி செய்து
கூட்டாய் இருக்கும் குதூகலம்
குழந்தைகள் எமக்கு இன்றில்லை

மழலை மாறும் முன்னரே
முன்பள்ளிசிறையில் எமை அடைத்து
குழந்தைப் பருவ குறும்பையெல்லாம்
குலைத்திடச் செய்தல் முறையாமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்கு சென்றால் கணிப்பீடு
பாரமாய் அழுத்தும் புத்தகங்கள்
துள்ளும் மகிழ்வுடன் கற்றிடவே
தடையாய் இருப்பது ஏன்தானோ?

கல்வி கற்பதில் கூட தம்விருப்பை
கட்டாயப்படுத்தும் பெற்றோர்கள்
மெல்ல அவர்க்கு சொல்வீரோ
பிள்ளைகள் எமது விருப்பத்தை

போதையில் தந்தை மிதப்பதனால்
பொருளாதாரமோ பிரச்சினைதான்
அதனை தீர்க்கும் துடுப்பாக
அனுப்புகிறார் எமை வேலைக்கு

கற்கும் வயதில் வேலை செய்தே
களைத்து கலங்கி நிற்கின்றோம்
மற்றவர் போலே மகிழ்வாய் வாழ
மழலைகள் எமக்கும் ஆசைதானே.

யுத்தத்தினாலே அநாதைகளானோம்
யுகத்தில் தனியே திகைக்கின்றோம்
பத்திரமானவையா காப்பகங்கள்
பயத்துடன் நாளைக் கழிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் எம்மை அணைக்கின்றார்
என்றே நாமும் நினைத்திருக்க
பண்பை மீறிய பாலியல் துஷ்பிரயோகம்
பாலர் எமக்கு பாதுகாப்பேயில்லையா?

நாட்டில் எத்தனை சட்டங்கள்
நாளும் வந்த போதினிலும்
கூட்டாய் அனைவரும் சிந்தித்தால்
குழந்தைகள் அனைத்தும் பெற்றிடுவர்

சிறுவர் தம்முரிமை மறுப்பதனால்
சிதைந்திடும் எதிர்கால சமுதாயம்
தறுதலை சந்ததி தாம் மிஞ்சும்
வீழ்ந்திடும் போதையாற்றினிலே

சிறுவர் உரிமை பேணுவதால்
சிறந்திடும் சமுதாயம் தோன்றிடுமே
வீறு கொண்ட அவர் சக்தியிலே
விளைந்திடும் நவயுகம் பூமியியலே.

*அபிராமி நல்லதம்பி,*
தரம் -10,
யா/வடமராட்சி இந்துமகளிர்
கல்லூரி,
பருத்தித்துறை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பரிசு பெற்ற கவிதை-2

# பெண்கள் உரிமைகள் பேணுவோம்

உலக உயிரினம் அனைத்திலும் காணுவீர்
உயரிய படைப்பு ஆண்பெண் ஆகும்
குலவிக் கூடிக்குடும்பமாய் வாழ்ந்து
கொண்டாடி மகிழ்வர் குவலயம் தனிலே
நிலத்தில் வாழும் உயிரினம் பெருகவே
நிகழும் ஆண்பெண் சேர்க்கை யிதாகும்
விலகாப் பிணைப்பு இறைவன் படைப்பு
மென்மை நிறைந்த பெண்மை ஆகும்.

பண்டை நாளில் பெண்கள் உரிமை
பாரில் பலரால் பறிக்கப் பட்டது
பெண்கள் என்றால் அடிமைகள் என்று
பிரித்து வீட்டில் அடைத்து வைத்தனர்
பெண்கள் கல்வி கற்க விடாது
பேதையாய் வீட்டில் ஒதுக்கித் தள்ளினர்
பெண்கள் என்றால் பிள்ளைகள் பெறுகிற
பிறவிகள் என்று நினைத்துக் கொண்டனர்

பெண்ணுக்குச் சுதந்திரம் சிறிதும் இல்லை
பேருக்கு அவளோ ஆணுக்கு அடிமை
எண்ணம் எல்லாம் ஆணா திக்கம்
எல்லாம் ஆணால் முடியும் என்கிறார்
உண்ண உணவு சமைப்ப தற்கும்
உடனிருந்து பிள்ளை பராமரிப் பதற்கும்
ஆணின் ஆசையைத் தீர்ப்ப தற்கும்
அவளே என்று ஆதிக்கம் செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதனம் என்ற கொடிய நோயால்
சீரழிந்து பெண்கள் வீட்டில் கிடக்கிறார்
பாதகமான பாலியல் வல்லு றவுகள்
பாரினில் பெண்ணைப் பைத்தியம் ஆக்குது
பூதலம் மீதினில் பெண்களைக் காக்கப்
புதிய சட்டங்கள் உருவாக வில்லையோ
சோதனை எத்தனை பெண்களுக் கென்றால்
சொக்கன் படைப்பில் பெண்களா பலிக்கடா

ஆணுக்கு சரிநிகர் பெண்கள் என்றால்
ஆன கல்வி அவர்க்கும் உண்டு
வீணுக்கு அவரை அடிமைக ளாக்கி
வேடிக்கை பார்க்கும் கூட்டம் அழியாதா
பூணும் தொழில்கள் சிறப்பாய் நடத்திப்
போற்ற வாழும் பெண்களைப் பாரும்
வேணும் புதிய உலகம் ஒன்று
வீறு நடைபோடு பெண்கள் உலாவ

மருத்துவம் பொறியியல் விண்ணில் பயணம்
மாண்புறப் பெண்கள் சாதனை படைக்கிறார்
பொருத்தமாய் எதிலும் புதுமைகள் செய்கிறார்
பொற்கொடி மங்கையர் அற்புதம் காட்டுறார்
கருத்தினில் ஒத்த காதலன் கைப்பிடித்து
கண்ணெனக் கணவன் பிள்ளைகள் காக்கிறார்
விருப்புடன் நல்லறம் இயற்றியே வாழுறார்
விந்தை மனிதராய் பெண்கள் திகழ்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதவை அநாதை ஆன பெண்களின்
    விழிவை எண்ணியே மறுமணம் செய்குவீர்
பதவி பட்டங்கள் பெண்கள் பெற்றுமே
    பணி முடிக்கிறார் பயன் பெறாமலே
உதவிடும் கரம் ஒன்றும் இல்லையோ
    உடைத் தெறிகுவீர் உதவாக் கொள்கையை
கதைகள் காவியத்தில் பெண்களை வாழ்த்திறார்
    காணும் பயனது கானல் நீரன்றோ.

சிந்தனை செய்குவீர் ஆண்கள் வர்க்கமே
    சிறப்புடன் பெண்மையைப் போற்றி வாழுங்கள்
தந்தையும் தாயும் தெய்வம் என்கிறீர்
    தாயில் சிறந்த கோயில் வேறேதடா
விந்தை உலகடா வேண்டாம் கொடுமைகள்
    விருப்புடன் பெண்கள் உரிமையைப் பேணுவீர்
இந்த உலகினில் பெண்கள் கைகோத்து
    ஏற்றம் காணுவீர் இல்லறம் சிறக்கும்.

*வ.யோகானந்தசிவம்,*
ஓய்வு பெற்ற அதிபர்,
வட்டு வடக்கு,
வட்டுக்கோட்டை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம்பரிசு பெற்ற கவிதை-1

# யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள்

நீதி உயர்ந்தமதி கல்வி - அன்பு
நிறைய உடையவனே தமிழன்
வீதி தனிலுயிரை நீத்த - பசுவின்
கன்றுக் குயிரளித்தோன் தமிழன் (1)

தக்கதே இன்னதென்றும் அறிவால்
தகாதன இன்ன தென்றும் - வாழ்வில்
ஒக்க நினைந் துலகில் வாழ்ந்து
உயர்வினைக் காட்டியவன் தமிழன் (௨)

அந்தத் தமிழர்வழி வந்தோர் - என
ஆய்வில் நிறுவியயாழ் மைந்தர்
எந்த உரிமைகளு மின்றி - உலகில்
இன்ன லுறுவ தென்னே உணர்வீர் (3)

முந்தைப் பகலிற் செய்தீ வினையே - எம்மை
முனைப்பாய் நிலைத்து நின்று நசுக்க
அந்தோ எமதுரிமை பறித்தார் - என
அழுது புலம்புவதிற் பயனென்? (௪)

பிறரின் உரிமைகளைப் பறித்து - பொய்
பேசித் திரிந்ததனால் நிலையாய்
**அறமும்** பகைமை கொள்ள யாழில்
அல்லல் குடியமர லாச்சு (௫)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணும் சிறுவர்களும் யாழில்
பேணும் மனிதவர்க்கம் இலரோ
எண்ணில் இவர்களுமே மனிதர்
என்றால் அவர்க்குரிமை இலையோ? (6)

மனிதர் மனிதர்களை மதித்து - என்றும்
மனிதராய் வாழ்வாரே யானால்
மனித உரிமை இல்லை உண்டு - என்ற
வாதத்திற் கிடமு முண்டோ சொல்வீர் (7)

அறம் - அறக்கடவுள்

*வ. கோவிந்தபிள்ளை.*
62, பழம்றோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம்பரிசு பெற்ற கவிதை-2

## இடம்பெயர்ந்து வாழ்வோரின் நவைகள் சிலவற்றை...

இத்தனைகாலமும்
பட்டது போதும்
இனியும் வேண்டாம்
இந்த அவலங்கள்.

காதுகளைச் செவிடாக்கி விட்ட
'ஷெல்' வீச்சு ஓசைகளும்
மனங்களைக் கல்லாக்கி விட்ட
உறவுகளின் இழப்புக்களும்.

எதிரியவன் பின்தொடர
எடுத்த பொருட்களுடன்
எங்கோ போவதென்று
தெரியாத அவலநிலை.

வீடு, வளவு, சொத்துக்கள்
யாவற்றையும் கைவிட்டு
வெறுங்கையாய் குழந்தைகளுடன்
சொந்த மண்ணை விட்டேகி

பூவும் நடக்கிறது.
பிஞ்சும் நடக்கிறது.
போகும் இடம் தெரியாது
பயணம் தொடர்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழையில் நனைந்து
வெயிலில் காய்ந்து
பயணித்துச் செல்லும்
அகதிகள் கூட்டமங்கே!

வீதியோரங்களும் மரநிழல்களுமே
தங்குமிடங்களாக மாறி
இயற்கை தரும் காய்கறிகள்,
இன்னமுதாய் கிடைத்தன.

என்று கிடைக்கும்
எங்களுக்கு விடுதலை?
என்று தணியும்
எங்கள் சுதந்திர தாகம்?

அகதிகளாய் அலைவதே
அனுதின வேலை ஆனது.
உதவிகளை எதிர்பார்த்தே
வாழ்க்கை இருண்டு போனது.

ஒரு நேர உணவிற்காய்
கையேந்தும் அவலநிலை
உடுக்க உடையின்றி
வாடி நிற்கும் துன்பநிலை

இப்படியே தொடர்ந்துநிற்கும்
இடம்பெயர்ந்த அகதிகளின்
இன்பமற்ற கதைகளும்
இன்னலுற்ற வாழ்க்கைகளும்

இருளே எம் இருப்பா?
ஒளியே வராதா?
மரணம் தான் முடிவா?
வாழ்வே கிடையாதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஏங்கி அந்தரிக்கும்
எம் மக்கள் வாழ்விற்கு
ஒளியேற்ற யாருமில்லை
வாழ்வளிக்க எவருமில்லை

இப்படியே தொடர்கின்ற
இவர்களது வாழ்வதனை
இனிதாக மாற்றிடவே
இன்றே நாம் புறப்படுவோம்

இவர்களும் மனிதர்களே
என்பதனை மறந்து நிற்கும்
நயவஞ்சகர் வாழ்வில்
மாற்றம் கிடைத்திடவேண்டும்.

மனித உரிமைகள்
மீறப்படாது இங்கே
மாநிலத்தில் இவர்களும்
நன்றாய் வாழ உதவ வேண்டும்

எதிர்கால வாழ்க்கையது
இருள் சூழ்ந்து போய்விடாது
ஒளிமயமாய் மாறிடவே
வழியதனைக்காட்டிடணும்

இடம்பெயர் வாழ் சமூகத்தின்
இன்னலதைப்போக்கி என்றும்
நலமுடனே அவர்கள் வாழ
வழிவகைகள் புரிந்திடணும்

எங்கே நிம்மதி?
எங்கே நிம்மதி?
என்றேங்கும் மக்களுக்கு
விடிவதனைக்கொடுத்திடணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாடத்தேவைகள் கூட
நிறைவேறாத நிலையினிலே
அல்லலுறும் மக்களுக்கு
உதவிகளைப் புரிந்திடணும்

'ஐயா பசிக்குது அம்மா பசிக்குது'
என்று கையேந்தும் பிஞ்சுகளின்
பசியினைப் போக்கியே
துயரதனைத் துடைத்திடணும்

தொடரும் சோகங்கள்
யாவற்றுக்கும் இன்றுடனே
முற்றுப்புள்ளியிட்டு
முடிவதனைக் கொடுத்திடணும்

மானிட சமூகமது
இடம்பெயர் வாழ் மக்களின்
விடிவிற்காய் என்றென்றும்
ஊக்கமுடன் உழைத்திடணும்.

இடம்பெயர்ந்த மக்கள் - வாழ்வை
இன்பமதாய் வாழ்ந்திடவே
புது வாழ்வு பெற்றிடவே
உழைத்திடுவோம் வாருங்கள்.

மனித உரிமை மீறல்களை
தகர்த்தெறிந்து விட்டு
மனித மாண்பதனை
வளர்த்திடுவோம் வாருங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெயர்ந்த மக்களது
ஏக்கக் குரல்களையே
வெளியுலகிற்கு எடுத்துரைக்க
ஒன்றிணை வோம் வாருங்கள்

ஓ மானிடனே......
தூங்கி விடாதே!
தூங்கி விட்ட மனிதத்தை
தட்டி எழுப்பி விடு!
மனிதம் பேணிடவே
விரைவில் புறப்படு!



ஏமிலியான் இராசநாயகம்,
ஜூமின்கொன்சேகா,
தரம்-13.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் பரிசு பெற்ற கவிதை-1

## சிறுவரே எம் சொத்துக்கள்

இன்றைய எமது சிறுவர்கள்
நாளைய உலகின் சிற்பிகள்
நன்றாய் அவரைப் பேணுவது
நமது கடமையென உணர்வோம்.

இன்று எம்மில் நிழல்தேடும்
இந்தப் பயிர்களை வாழ வைத்தால்
நாளை எமக்கு நிழலைத்தரும்
நல்ல விருட்சமாய் மாறிடுவார்.

சிறுவர் களது உரிமைகளைச்
சிறப்பாய் நாமும் பேணிடுவோம்
பெருமையோடு அவர் வாழ
உரிய வழிகளை நாம் சமைப்போம்

பேனா பிடிக்கும் கைகளிலே
பெரிய சுமைகள் சுமத்தாமல்
ஆனா தொடக்கம் அனைத்தையுமே
அவர்கள் பயில உதவிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுமையாகத் தண்டிக்கும்
கொடிய வழிகளை நாம் களைவோம்
கருணையோடு அரவணைத்து நல்ல
கல்விச் செல்வத்தை அவர்க்களிப்போம்.

காமப் பசியோடலை கின்ற
கயவர் கையில் சிக்காமல்
சேமமாக அவர் வளர
சீராய் நல்ல பணிசெய்வோம்.

சிறுவர் எமது சொத்துக்கள் - எம்முன்
சிந்திக் கிடக்கும் முத்துக்கள்
அருமை உணர்ந்தே பேணிடுவோம் - இந்த
அவனி வளம்பெற வழிசெய்வோம்



செல்வி-ஹர்சினி ஜெயபாலசிங்கம்,
தரம் - 12,
யா.கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் பரிசு பெற்ற கவிதை-2

## பெண்ணடிமை

**புதுயுகம் படைக்க புறப்படு பெண்ணே**

என்னடி பெண்ணே இன்னமும் தூக்கமா?
சன்னமாய் வாழ்வதில் சிந்தையில் வட்டமா?
சொல்லடி பெண்ணே தமிழ்த்தாயின் மகளே?
சிளர்ந்து நீ எழுந்திடில் இந்நிலை வருமா?

சத்தியம் காத்திடும் பெண்ணினம் சாகுமா?
சாத்தியம் இல்லாக் கொடுமைகள் தீருமா?
நித்திலம் எங்கும் ஆணினம் ஆளுமா?
நித்திரையாகி நீதியும் மாளுமா?

உண்மையின் குரல்வளை இப்படி நசியுமா?
உன்னத வாழ்வுகள் மண்ணோடு மடியுமா?
இத்தனை கேவலம் அரங்கிலே ஏறுமா?
இன்றைய மகளிர்க்கு இலையுதிர் காலமா?

இன்றைய மகளிரே இன்னமும் அச்சமா?
இதயத்தில் உமக்கு உணர்ச்சியே இல்லையா?
உயிருக்குப் பயந்து உள்ளுக்குள் முடக்கமா?
உள்ளக் குமுறல்கள் உமக்குள்ளே அடக்கமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மான உணர்வுகள் தரணியில் வாடுமா?
தனக்கு நிகர் இன்லையென்ற ஆண்குரல் ஓங்குமா?
ஆணினம் உன்னை அடிமையாக்க முடியுமா?
ஆவேசம் கொண்டு அழித்திடத்தான் இயலுமா?

விலங்குகள் கைகளிலே பூட்டத்தான் முடியுமா?
விலைமகளீர் சந்தையிலே விற்கத்தான் முடியுமா?
மகளிரின் உரிமைமீறல் நடந்திடத்தான் முடியுமா?
மாண்புமிகு மகளிரின் கற்புநெறி அழியுமா

மங்கையராய் இப்புவியில் பிறந்திடுதல் வேண்டின்
மாதவந்தான் வேண்டுமென ஓர் கவிஞன் சொன்னான்
மங்கையர் தம் பெருமையினை இவ்வுலகோர் சிறிதும்
மனதார உணர்ந்ததுவாய் நாமறியவில்லை.

கல்வியினால் மங்கையர்கள் உயர்ந்தார்கள் உண்மை
கடுமுழைப்பால் மேன்மேலும் சிறந்தார்கள் அறிந்தோம்
பல்சிறப்பும் உற்றார்கள் ஆனாலும் இன்றோ
பாரினிலே சீதனத்தாற் துன்பமுறுகின்றார்கள்.

சீதனம் என்னும் சிறையில் இடமுடியுமா?
சீக்கிரம் ஆணுக்கு அடிமையாக முடியுமா?
எழுந்து நீ பேசினால் இந்நிலை நீளுமா?
இல்லையேல் என்றுமே ஏமாற்றம் தானா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏமாற்றி ஏமாற்றி இழுத்தடித்த
தொடர்கதை இனிமேலும் தொடராது
முற்றுப்புள்ளியிட்டு கதையை முடித்துவிட
முண்டியடிக்கும் மகளிர் முனைந்து விட்டனர்.

சண்டித்தனமும் சர்வாதிகாரமும் - மகளிர்
சக்திக்கு மண்டியிட்டே ஆக வேண்டும்!
புறப்படு பெண்ணே புதுயுகம் படைக்க!
உண்மைக்காய் குரல்கொடு உரிமைக்காய் உயிர்விடு!



ச.கமல்ராஜ்.
தரம் - 13, கலைப்பிரிவு,
யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் உரிமைகள்

### சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம்

நாளையிங்கு உருவாகும்
நலமான சமூகத்தை
வாழவைக்கும் வித்தகர்கள்
வல்லவன் தந்த சொத்துக்கள்

ஏதுமறியாப் பிஞ்சுமனம்
ஏதும் விதைக்க ஏற்ற உளம்
தீது நன்மை பிரித்தறியத்
தெரிந்திடாத சிறுவரிவர்க்கு



நல்லவற்றைச் சுட்டிக்காட்டி
நல்லறிவை ஊட்டுவதும்
வல்லவராய் வாழ்வதற்கு
உளத்துணிவைக் கூட்டுவதும்

கல்வியின் பெருமையினை
கனிவுடனே கூறுவதும்
பல்விதமாய் அவருள்ளம்
சுழல வழி சமைப்பதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்றுமே அவர்மனம்
சலிக்காது சிரித்திடவும்
பற்றதனைக் கல்வியின் மேற்
பெருகிடச் செய்வதுவும்

குற்றமேதும் புரிந்து விடின்
கச்சிதமாய் விளங்க வைத்து
மற்றுமோர் குற்றம் செய்ய
மனம் மறுக்க வைப்பதுவும்

தன்னிலத்தில் பற்றினையும்
தன்மான உணர்வினையும்
உன்னதமாம் என்றறிய
உவமையுடன் உரைப்பதுவும்

மன்னுயிரை வதைக்கு மெண்ணம்
மனதிலிருந்து தவிர்ப்பதுவும்
தன்னுறை பெருமையினைத்
தெரிந்திடச் செய்வதுவும்

கல்வியினை இடைநிறுத்தி
கடும் உழைப்புப் பெறுவதனை
துல்லியமாய் எங்குமே
தடைசெய்து காப்பதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போதைய சமூகத்தின்
இருகண் மேற்கடனாகும்
தம்பியிதை யாருமே
செய்யாது தவிர்த்திடின்

பஞ்சமா பாதகத்தில்
மேலான குற்றமாகும்
வஞ்சகம் இழைத்தவராய்
நிந்திக்கும் எதிர்காலம்

என்றுளத்தில் உறுதியுடன்
சிறுவரின் உரிமையினை
நன்றாயென்று காத்திதன் மூலமோர்
காத்திரமான சமூகத்தை ஆக்குவோம்!




*ச.கமல்ராஜ்.*
தரம் - 13, கலைப்பிரிவு,
யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் பரிசு பெற்ற கவிதை-3

# யாழ்ப்பாணத்தில் பெண்கள் உரிமைகள்

பெண்ணாக வந்த சிருஷ்டி தவப்பயனே
பண்ணாக பொங்கும் பரசுகமே - யாழ்
மண் மீது உதித்தவளே - ஆசை வலைப்பட்ட உன் இதயம்
புண்ணாகும் முன் உந்தன் உரிமைகளை அழிக்காது
எண்ணியே ஆனந்தமாய் வாழ்வைப் புரி!

விண்ணணி மாட கூட வியன் பெறுஞ் செல்வ வாழ்வும்
கண்ணணி காட்சியின்பங் கனவாகிப் போகக் கன்டோம்
மண்ணணி உடலைச் சாகா மணியென மாற்ற நின்றாய்
எண்ணிலார் புதைகுழி செம்மணிக்கு ஏகினாரே அம்மணிகளாய்
புண்ணியமான இந்த யாழ்ப்பாண மண்ணதனில்

மண்ணினை வளைத்த போரும் வழியினை அடைத்த பேரும்
புண்ணினை விளைத்தபேரும் பொய்ப்பழி தூற்றுவாரும்
கண்ணியமான இவ்யாழ் மண்ணில் உலவும் உல்லாசபயணிகளால்
நன்னுதற்கினிய பெண்கள் நாசமாகிப் போவதை
திண்ணிய நெஞ்சுடனும் வீர மறவர்கள் நினைவுடனும்
கண்ணியமாய் வாழவும் கடமை நிறைவேறவும்
உண்மையாகவே பெண்ணின் உரிமைக்கு குரல் கொடுப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனதுரிமை நிலைநிறுத்த தாவிவரும் நாயைப்போல்
தமிழுரிமைக் குயிர்வாழுங்கா - தமிழரினியுண்டோ
மனிதர் குலத்துதித்த தையலே - மரகதமே
நமதுரிமை தமிழீழத்தில்
நன்மையெல்லாம் யாழ் மண்ணில்
அமைதியுடன் பண்பழகும் அருளிசையும் பூண்போம்
வள்ளுவரின் நல்வழிக்கு ஒற்றுமையாய் வாழ
உள்ளமொன்றி திண்ணிய நெஞ்சுடன் - பெண்ணே
உன் உரிமை மக்கு குரல் கொடுப்போமா.

ந-ஸ்ரீநாகபூஷணி.
இல:82/2, காங்கேசன்துறை வீதி,
கொக்குவில்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகளை மதிப்போம்



எம் இதமான இம் மண்ணில் இனிமையாய்
வாழும் எம்மக்களுள் ஏனையா இனபேதம்!
இன்பமாய் வாழ்ந்த நாங்கள் இணைந்தே வாழலாமே!
இருளுள் வாழ்ந்த எங்களுக்குள்ளே ஏனையா பழிவாங்கல்
நாமெல்லாம் ஒரு மக்கள் மனிதப் பண்போடு வாழுவோமே!

கல்வி கற்ற எம்மினத்தார் கடுமையாய் நடப்பது ஏனையா!
போரழிவால் எம் மனம் கல்லாய்ப் போனதுவோ?
பாதிக்கப் பட்ட எம்மக்கள் பாவமையா
மனிதப் பண்போடு மாறி நாம் வாழ்வோமே!
பாவப்பட்ட எம்மண்ணில் பரிதவிக்குதையா எம்மக்கள்
பகைவரையும் நம் பண்பாலே மாற்றிடுவோமே!
பட்டங்கள் பதவிக்காய் ஏனையா அடிபாடு
படித்த எம்பண்பதனை பாதியிலே மறப்போமோ!

பலவற்றைப் படித்த நாங்கள் பண்போடு வாழ்வோமே!
இதயம் நிறைந்த இம் மண்ணில் இன்பமாய் வாழ்வோமே!
ஈழமான எம்மண்ணில் இடர்கள் அற்று வாழ்வோமே!
உறவுகள் நிறைந்த எம் மண்ணில் உயிர்ப்புடன் வாழ்வோமே!
ஊமையாய் வாழ்ந்த நாம் எம் உரிமையை கேட்போமே!
ஏதுமறிய பிள்ளைக்கு உரிமையை உணர்த்துவோமே!
ஐயம் ஏதும் அற்று அன்புடன் வாழ்வோமே!
ஒன்று பட்டு நாம் மனித உரிமையை மதிப்போமே!

மனித உரிமைகளை மதிக்கும்
*புங்கையூர் துரைசுவேந்தி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் உரிமைகள்

எமக் கென்று உரிமைகள் பலவுண்டு
எல்லாமே ஏட்டிலே மட்டு முண்டு
சட்டங்கள் திட்டங்கள் ஆயிரமுண்டு
சத்தியமாய் காத்திட யாருண்டு
பல் பொருள் கடையிலே பாலகன்
பள்ளி செல்லும் வயதிலே பணியாளன்
வசதி குறைந்த வீட்டுப் பிள்ளை
வர்த்தகர் வீட்டிலே வேலைக்காரன்

கேட்பதற்கு யாருண்டு எமக்கு
கேட்டாலும் பார்ப்பதற்கு எவருண்டு
படுத்துறங்க வீதியிலே நடைபாதை
பசித்தாலும் புசிப்பதற்கு உணவில்லை
கட்டாயம் சிறுவர் உரிமை யென்று
பாதுகாப்பு நிதி யங்கள் பசப்புகின்றன
பஜரோவில் திரிகின்ற கனவான்கள்
பக்குவமாய் பம்மாத்துக் காட்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் உரிமைக்காய் விளம்பரங்கள்
எக்கச் சக்கமாய் பிரசுரங்கள்
மேடையிலே முதன்மையாய் பேசிடுவார்
மேன்மை கொள்ளும் வழியும் சொல்லிடுவார்
அங்காடிக் கடையிலே அரும்புகள்
அவதிப்படும் அவலம் கண்டு கொள்ள மாட்டார்
வீதியிலே செருப்பு தைக்கும் சிறுவன்
வீசை என்ன விலை உரிமை

நோனாவின் பத்துவயதுக் குழந்தைக்கு
ஆயாவாய் பன்னிரண்டு வயதுச் சிறுமி
அலுவலக அதிகாரி வீட்டிற்கு
அகதிமுகாம் சிறுவன் பணியாளாய்
வேலியே பயிரை மேய்ந்த கதையாய்
வேசம் போடும் அலுவலர்கள்
இத்தனைக்கும் மத்தியில் சிறுவர் உரிமைகள்
இங்கிதமாய் பரப்பியே பம்மாத்துக் காட்டிடுவார்

ஏழைக் குடும்பத்தின் ஏழ்மையை
ஏதிலிச் சிறுவனின் அநாதரவை
நமக்குச் சாதகமாய் மாற்றிடும்
தக்கோர் ஏராளம் இங்குண்டு
நமக்குண்டாம் உரிமைகள் ஏராளம்
நாதியற்று நாம் அலைவதை - நாளும்
கண்டு கொள்ளாத அமைப்புக்களுக்கு
கதியோ சிறுவர் உரிமைக் கோஷம் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலகங்களில் எடுபிடி ஏவல்களாய்
உழைக்கும் சிறுவர் தான் எத்தனை
வயதுக்கு மீறிய வேலைப் பழுவால்
வாடி வதங்கிடும் குருத்துக்கள்
காத்திட சட்டங்கள் எங்கே?
கூட்டம் போட்டுச் சொன்னவரும் எங்கே?
நமக்குரிமை உண்டென்று
நாடெல்லாம் பிரசாரம் அழகாக.

சிறுவர் உரிமைக்காய் உறுதியாய்
உழைக்க வேண்டிய நாளிது
வந்திக்க வேண்டிய பணியிது
சித்திக்க வேண்டிய வேளையிது
சிறுவர் உரிமைக்குரிய காலமிது
செயலாற்ற வேண்டிய நேரமிது
செய்வோமா? செய்து முடிப்போமா? என
வினா எழுப்ப வேண்டாம்
விடை எழுதி முடிப்போமே.

ஜீ.நளின் பிரதீபன்.
28,1, பிரப்பங்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் மனித உரிமை??

யாழ்ப்பாணத்தில் அன்று மனிதர்க்கு
மின்சாரம் இருக்கவில்லை,
குப்பி விளக்கில் குந்தியிருந்து - படித்து
குவலயம் வியக்கும் உயர்வு கண்டான்.
போதிய உணவு, எரிபொருள் வருவதில்லை.
மாடு பூட்டி, உழுது பயிர் செய்து,
மாட்சிமை பல படைத்தான்.
போர் அவனைத் துரத்த, துரத்த,
போராட்டமே வாழ்க்கையென உணர்ந்து
இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழ்ந்தான்.
இறுதிவரை தன்னம்பிக்கை இழக்காது
சுயகால்களில் நிற்க,
சுயதொழில்கள் பல செய்தான்.
சுதந்திரக் காற்றையே
சுவாசமாகக் கொண்டான். - இன்று
மின்சாரம் வந்தது,
மின்பொருட்கள் நிறைந்தன.
தொலைபேசி அலறியது,
தொலைவில் உள்ளோரும் நெருக்கமாயினர்.
பெற்றோல் தாராளமாக கிடைக்க,
பெரிதும் வாகனம் பெருக!
காலன் கவசவாகனத்தில் பாதுகாப்பாய் வந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால் நிமிடத்தில் உயிர்கள் பல பறித்தான்.
நிம்மதி என்பது எட்டாக்கனியாகியது.
சுயமாக சிந்திப்பதை,
சுதந்திரமாக கூறமுடியவில்லை.
காவலர்கள் கைதட்டிப் பார்த்திருக்க,
காரிகைகள் சீண்டப்படுகின்றனர்.
கொலை, களவு, பித்தலாட்டம்
கொடூரமாக பெருகுகின்றது.
சுயவிருப்பில் எதையும் செய்ய முடியவில்லை.
சுய அபிலாசைகள் நசுக்கப்படுகின்றன.
மனிதன் மனிதத்தை தொலைத்துவிட்டு,
மனித விழுமியங்களை மறந்துள்ள போது,
மனித உரிமை பற்றி சிந்திப்பானா ? ? ?

நன்றி.



செல்வி. அருள்மொழி
ஆனந்தராசா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவின் நிஜங்கள்

அடுப்பங்கரையில்
அடங்கிப் போகும்
அகிம்சையல்ல பெண்மை
துடுப்பாய் சமூகச்
சிறைகள் உடைக்கும்
துறப்பணங்கள் பெண்கள்!

உலகம் தனிலே
உயிரின் கருவாய்
உலவும் மகிமை
பெண்மை
நிலவில் கூட
குறைகள் உண்டு
நிறைவே உளது
பெண்ணில்!

சரிநிகர் சமான
சாத்திய வாழ்வில்
சாதிக்கும் சிகரம்
பெண்கள்
உரிமைகள் பெறவே
உயிரைக் கொடுக்கும்
தியாகத்தின் தீபம்
பெண்கள்!

மனித வலுவின்
மகத்துவ சக்தியை
புனிதப்படுத்தும்
பெண்மை
இனிதாய் உலகை
இயங்கச் செய்யும்
இதயம் கூடப்
பெண்மை!

குலவிளக்காய்
குன்றாதொளிரும்
நிறைவின் நிஜங்கள்
பெண்கள்
உலவும் உண்மைத்
தெய்வங்குடிகொள்
உத்தம ஆலயம்
பெண்கள்.

சூரியநிலா,
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடைந்திடுவாய் உன் உரிமைகளை

பெண்ணே உன்னை
மண்ணாகவே எண்ணி
காலால் மிதிப்பவரை - உன்
காலுக்குள் போட்டுவிடு!

குட்டக்குட்டக் குனிந்து நின்றால்
குட்டிக்கொண்டே செல்வர்
தட்டிக்கேட்க எழுந்து நின்று
எட்டிப்பார் வையகத்தை!

கட்டுப்பாடுகள் பல கூறி
கட்டி வைக்கும் சமுதாயத்தை
தட்டிக்கேட்க எழுந்திடுவாய் - நாளை
விரைந்துவரும் பெண்ணுரிமை!

உறவுகளுக்காய் உயிரைச் சுமப்பவள்
உதிரத்தில் பாசத்தை வளர்ப்பவள்
அவனின்றி அணு அசைந்தாலும்
அவளின்றி அசையாது!

முகத்திரையைக் கிழித்தெறிந்து
முற்றத்துக்கு வா பெண்ணே
சுதந்திரமாய்த் திரிவதற்கு - வையகத்தில்
உண்டு உனக்கு உரிமை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி படைத்த புதுமைப்பெண்ணே
பெண் விடுதலைக் கும்மியடி
பட்டங்கள் பெறவும் சட்டங்கள் இயற்றவும்
இணைந்து நிற்போம் நாட்டில்!

வீர சாகசமாய் விளையாடி
வீறு கொண்டெழுந்து
விடுதலைக்காய்ப் புறப்பட்டு
உரிமைக்காய்க் குரல்கொடுப்போம்!

அடுப்பங்கரையினிலே - நீ
அழிந்து போகலாமோ?
அறியாமைகொண்டு நீயும்
அடிமையாவதேனோ?

அறியாப் பெண்ணே உன் உரிமை பிறரிடமா?
அனைத்தும் உன் கையில்
அறியாமையை விலக்கி
அறிந்துகொள் நீயும்!

பேசிக்கொண்டிருக்காது - தென்றலாய்
வீசிவிடு புயலாய்
சுற்றி வீசும் நச்சுக்காற்றுக்களை
சுட்டெரித்துவிடு உன் உரிமையால்!

ஆற்றல்கள் பலவும் பெற்று - அவனிதன்னை
ஆளவந்த பெண்பூவே!
ஆற்றிடுவாய் சாதனைகள் பற்பலவும்
அடைந்திடுவாய் உன் உரிமைகளை!

அ.கௌசிகா.
ஆண்டு - 12,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நாங்கள் அகதி வாழ்வில் நடைப்பிணமானவர்கள்"

அடிமை விலங்குகள் - எங்கள்
கைகளைப் பூட்டியது!
நாங்கள் அகதி வாழ்வு
அமைத்துக் கொண்டவர்கள் - - -
செல்லரித்த தேசத்தில் - எம்
சொந்தங்களும் உறவுகளும்,
அகதிகளாக - - - " நாங்கள் அகதி வாழ்வில்
நடைப்பிணமானவர்கள்" . . !

சுடுகாட்டின் வழியே - - -
எட்டித் தொடும் வெயிலில்
எமக்காய்குடைபிடிக்கும் மரங்கள் - - -
கால்களுக்கு வேகத்தைப் பூட்டி
நாமும் நடக்கிறோம் - - - !
முட்டி மோதும் எறிகணைகள் - எம்
காதுகளை அறைக்கிறது - - - !
எங்கோ ஓங்கி ஒலிக்கும் அழுகுரல்கள்
எம்மை அழைக்கிறது - - - நாங்கள் நடக்கிறோம்
அகதி வாழ்வில் நடைப்பிணமானவர்களாய் - - !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளியிழந்து வீட்டின் விழிவிழந்து
வீதியிலே படுத்துறங்குகின்றோம் - - -
பசியெடுத்து நாக்கில் தாகமழைக்கிறது!
எமக்கென்று யாருமில்லை - - - !
காற்றிறைத்து வாரியடிக்கிறது!
புல்வெளிகளைப் பாய்களாக்கி,
சுடுகாட்டுச் சாம்பல் போர்வைகளாக்கிறது - - !
குளிர்காற்றில் கொட்டுகிறது பனித்துளிகள்
உடல்கள் விறைத்து நடுங்குகிறோம் - - -!
நாங்கள் அகதி வாழ்வில் அலைபவர்களாய் - - !

அர்த்த சாமத்திலே அமைதியாய் அழைக்கிறது
சுடலைக் குருவிகளின் விடிசாமச் சீண்டல் - - -
அது எங்களூரின் கோயிலின் பள்ளியெழுச்சியின்
ஒலியாக விழிகளைத் துயிலெழுப்புகிறது - - !
வானம் வையத்தை முட்டியது
மலர்வு கண்ணில் மறைகிறது - - -
இருந்தும் நாம் சோரவில்லை
சோதனையில் வாடுகிறோம் - - !
சொந்தங்களும் எம்மை விட்டு
பிரிந்து விட்டார்கள் - - -
அவ்வழியே எமது பயணமும் - - -
"நாங்கள் அகதி வாழ்வில் நடைப்பிணமானவர்கள்" - - -!



*என். பிறேமசீலன்.*
**கோண்டாவில் வடக்கு,**
**கோண்டாவில்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயல்பு வாழ்க்கை எப்போதோ

அந்தக் குளக்கரையில் அழகான இரு மரங்கள்
ஒன்று அரசமரம் மற்றதோ மருதமரம்
வானுயரச் செளித்து வளர்ந்து நின்றனவே -
பல்லாண்டு காலமாக.

அரசில் காகங்களும் மருதில் கொக்குகளும்
வாழ்ந்து வந்த காலத்திலே காகங்கள் இடையிடையே
இனவாதம் பேசியதால் தொடங்கியதே -
பெருஞ் சண்டையொன்று.

நாம்தானே பெரும்பான்மை எமக்கே கொக்கினமும்
அடிபணிய வேண்டுமென்று அடக்கியாளும் தோரணையில்
அரசிலிருந்த காகங்கள் கத்திக் கொண்டு தொடர்ந்தனவே
நீதியில்லாக் கடுஞ்சமரில்.

கொக்குகளுடன் மோதியதில் அப்பகுதியே அதிர்ந்தது
கொக்கின் சிறுசுகளோ தற்கொலைத்தாரியாக இச்சமரில்
உயிரிலும் மேலானது உரிமைதான் என்றெண்ணியே -
போராடிக் கொண்டன தம்மினத்துக்காக.

மருத மரமதில் இலையில்லை காயில்லை கொக்குகளின் கூடுகளில்லை
குஞ்சுகள் பல இல்லைகுடியிருக்க உவப்பான வேறு மரமுமில்லை
உடன்பிறப்புகளையும் உறவுகளையும் பிரிந்து அகதிகளானதுவே
ஆதரிப்பார் யாருமின்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குகளின் அவலநிலை பல திக்கும் பரவியதால்
வெண்புறாக்கள் சில இவை பாவம் என்றெண்ணி
சமாதானம் வேண்டுமென்று இருதரப்பையும் அணுகியதே
பண்புடனே பல தடவைகள்.

இச்செயலால் சண்டைதான் நின்றதன்றி சமாதானம் இன்னுமில்லை
இருப்பிடங்களில்லாமையால் இனவிருத்தியும் மந்தநிலை
உண்பதற்காய் மீன் கொத்தவோ உறங்குவதற்காய் கூடுகட்டவோ
இளசுகள் கற்கவில்லை இன்னும் பல கற்கை நெறிகள்.

உயிரினங்கள் யாவைக்கும் தாமிருக்குமிடத்தில் உரிமையுண்டு
அதிகாரம் செலுத்துவதால் இவ்வுண்மை மறையாது
இந்த நிலை மாறும் நாள் எப்போதோ -
அந்தக் குளக்கரை மருதில் இயல்பு வாழ்க்கை வாழ்வதற்கு.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை உரிமைகளே...

ஓ....
இனியென்ன நான் சொல்ல
சமாதான ஒப்பந்தம் எழுதி
ஈராண்டு ஓடிற்று
ஆனாலும்
எம் வாழ்வில் என்ன மாற்றம்?

போரின் பரிசாய்ப் பெற்ற
ஆக்கினைகள் மிகுந்த
அயலவனின் வாடகை நிலம்,
குனிந்து சென்று
குறுகிப் படுக்க
அந்நியனின்
அன்பளிப்புக் குடிசை
இவைகள் தானா எமது தேவைகள்?



வளம் கொழிக்கும் எம் மண்ணில்
வளமாக வாழ்ந்திருந்தோம்
இன்று முற்றமில்லா வீட்டினில்
முதுகொடிந்து கிடக்கின்றோம்
முற்றத்து மாமரத்தில்
முறியாக் கிளைபார்த்து
அண்ணா கட்டிய ஊஞ்சல்
பக்கத்தில் பலாமரத்தில்

பழுத்து விழுந்த இலைபொறுக்கி
பாலாட்டிற்கு உணவளிக்க
பாட்டி கொழுவிவைத்த குத்தூசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் குளித்த நீரை
வாழைகளிற்கும்
குடிக்கக் கொடுப்பதற்காய்
வாய்க்கால்கள் வெட்டியபின்
வாழைக்குள் ஒழித்துவைத்த
அப்பாவின் மண்வெட்டி
இவையெல்லாம் இன்னும்
அங்கேயே இருக்குமா?
போய்பார்க்க ஆசைதான்
ஆனாலும் முடியாதே...

பன்னிரண்டு ஆண்டுகள்
முழுதாய் முடிந்திற்று
எம் மண்ணை விட்டுநாம்
இடம் பெயர்ந்து வந்து

விரும்பிய இடத்தில்
விரும்பியபடி வாழ்வதற்கு
அனைவரிற்கும் உரிமையென
அரசியல் யாப்பினிலே
அழகாக எழுதிவிட்டு - எமது
அரசு இங்கென்ன செய்கிறது?

சொந்த வீட்டினையே
சென்று நாம் பார்ப்பதற்கு
தடைகள் பல போட்டு
தவிசாக நிற்கிறதே
எம் அடிப்படை உரிமையினை
அநியாயமாய் மறுக்கிறதே...



ஆந்தை.
வேலணை கிழக்கு,
வேலணை -05.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடம்பெயர்ந்து வாழ்வோர் நலன் பேணல்

அன்னையை இழந்து தந்தையை இழந்து
 அநாதையாய் அகதிமுகாம்களில் வாழும்
அன்புள்ளங்களின் நலன்களை
 அன்புடன் பேண வேண்டும்
இராணுவ அராஜகத்தின் இன்னல்களாலும்
 இனவெறி யுத்தத்தாலும்
இடம்பெயர்ந்து வாழும் - எம்
 இனங்களின் நலன்கள்
நலனோடு பேண வேண்டும்.

உண்ண உணவின்றி
 உடுக்க உடையின்றி
கதி அற்ற நிலையில் அகதி எனும் - நாமத்துடன்
 கண்ணீர் வடிக்கும் கருணை உள்ளங்களின்
நலன்கள் நன்றாகப் பேணவேண்டும்

ஒருநேர உணவுக்கு வழியின்றி
 ஓய்வாக உறங்க இடமின்றி
உழைக்க ஏதும் வழியின்றி
 ஊதியத்திற்கு கையேந்தி பிச்சையெடுக்கும்
பிஞ்சு உள்ளங்களின் நலன்கள்
 பேணி வளர்க்கப்பட வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு இழந்து பொருள் இழந்து
நகர்விட்டு இடம் நகர்ந்து
நரக வாழ்வை அனுபவிக்கும்
நம் ஜீவன்களது நலன்கள்
நன்கு நாம் பேண வேண்டும்

இடம் பெயர்ந்து வாழ்வோரின்
இன்னல்கள் சொல்லில்அடங்காது
வார்த்தைகளால் சொல்ல முடியாது
வரையறையேயற்ற வன்செயல்கள்
அப்பப்பா!

ஈகையாளரே! இடுக செல்வம்
இயம்புக இனிய வார்த்தை
தயைவுடன் இவர்களிற்கு
தக்க தருணத்தில் உதவிடுவீர்

இடம் பெயர்ந்தோர் எனும் நாமம் மறந்து
இக வாழ்வில் உள்ளம் நிலைக்க
நிலையற்ற இவ்வுலகில் - உடல்
நிலைக்கும் மட்டும் நிம்மதியாக வாழ
உத்தமரே நீவீர்
உதவிடுவீர் உம் கரம் நீட்டி

இன்னும் இன்னல்கள் தொடராமல்
இனிதே இவ்வுள்ளங்கள் வாழ
இறையருளை இறைஞ்சி வேண்டி
இன்னருளையும் பொழிக வாழ்வில்

செல்வி-சுரேஷியா சந்திரசேகரம்,
அராலி வீதி,
சாங்கானை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுத்தப் பிரசவங்கள்

இராப் பொழுதுகளில்
உரப்பேறாத
உந்தனது விம்மல்கள்
துணையிழந்த ஆட்காட்டி உன்னோடு
துக்கிக்கும் அறுகு நுனி
உந்தன் விழிநீரைச் சுமந்து நிற்கும்
குலைந்த தலையும்
மெலிந்த உன் உடலும்
தொலைந்து போனவனின்
துணையென்று சான்றுதரும்
விலையுயர்ந்த வாழ்வெல்லாம்
மலையேறிப் போனதனால்
விலைகுறைந்த பாணிற்காய்
நித்தம்என்னோடே
பந்தியிலே நிற்பாய் நீ - பின்
பத்து மணியளவில் வெறுமனவே வீடு
செல்வாய்
கத்தும்கடல்போலக்
குமுறுவாய் நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றேனோ?
அண்ணார்ந்து பார்த்து
ஆண்டவனை நொந்து கொண்டு
நின் வழியே செல்கின்றாய்
நில் ! என்று சொல்லவும்
நாதயில்லை எனக்கு
இத்தனைக்குள் நீ
இவ்வுலகை, நீத்திட்டாய் - நீ
'செத்த சேதி' சொல்வதற்கும்
சக்தியில்லை எனக்கு
அதுவரையில்
உந்தனது வரவிற்காய்
'உன்னவர்கள் ' காத்திருப்பர்

உதயபாரதிலிங்கம் தமிழ்மாறன்
7ஆம், வட்டாரம்,
நயினாதீவு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள்

புலரக் காத்திருக்கும்
புதுயுகம் ஒன்றிற்காய்
விளக்கேந்தும் விட்டில்களாய்
விடிவிற்காய் வீற்றிருக்கிறோம் - ஓ... நாம்
சிலுவையில் அறையப்பட்டிருக்கிறோம்!!
பூக்கள் நிறைந்த பூவனம் - இருந்தும்
எம் கண்கள் தரிசிப்பது
முட்களை மட்டுமே ! யேசுவின்
முட்கிரீடம் போல் நம்
பாரச் சுமைகளை இறக்கிவைக்க முடியவில்லை!!
ஓ...... நாம் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறோம்!!
மனிதங்கள் சிலுவை சுமக்கும்
மனிதாபி மானங்கள் அறையப்படும்
மரணித்துப் போன மனங்களின்
மகத்தான தேசத்தில் ....... ஓ......
நாம் சிலுவையில் அறையப்பட்டிருக்கின்றோம்!!!
நியாயங்கள் நிராகரிக்கும்
நீதிபதிகள் நிமிர்ந்து நடக்கும்
நியாயசாலைகள் நிறைந்துபோன
நிலவுலகில் நாம் மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழுத்துப்போன உண்மைகளை நம்பி...
ஓ.... நாம் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறோம்!!!
புத்தாண்டுப் பரிசாக
புதிய புதைகுழிகள்
பூத்திருக்கும் தேசத்தில்
புலரும் சமாதானமும்
புதைகுழியில் தானோ!!
பூக்களின் முகங்கள் கூட
புன்னகைக்க முடியாமல்
பூட்டுக்களோடு..... ! ஓ... நாம் சிலுவையில்
அறையப்பட்டிருக்கிறோம்
சரித்திரம் படைத்திட
சாதனைகள் ஈட்டிட
சோதனைச் சாவடிகள்
சம்மதிக்க வேண்டுமே!!.
செம்மணி தொடக்கம்
சென் பீற்றர்ஸ் வரை
சிதிலமாக்கப்பட்ட
மனிதப் பூக்கள்
மறக்கப்பட்டால் மட்டும்
மறுபடி மலருமா? ஓ... நாம் சிலுவையில்
அறையப்பட்டிருக்கிறோம்!!!
அனுதினமும் கேட்டும்
அகதிச் சேவல்களின்
அவல முகாரிகளில்
அழுது கொண்டிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நிய தேசத்து
அன்பின் உறவுகள்
அன்னை பிடிசேர
அனுமதிக்குமா? நம்
புரிந்துணர்வு ஒப்பந்தம்? ஓ.... நாம் சிலுவையில்
அறையப்பட்டிருக்கிறோம்!!!
வேர்களின் விழிவிற்காய்
விழுதுகளே விதைக்கப்பட்ட
விசித்திரம் விலகிவிடுமா?
புத்தம் புதிதாய்
புனையப்பட்ட
புரிந்துணர்வு ஒப்பந்தத்தால்..? ஓ... நாம் சிலுவையில்
அறையப்பட்டிருக்கிறோம்!!! எனவே..
மனிதங்கள் மிதிக்கப்படும் தேசமாய்.....
மனிதாபிமானங்கள்
மனங்கொள்ளப்படும் தேசமாய்.....
மரணிக்காமல் இருக்க...
மனிதர்களே உரிமை கொடுங்கள்!!
மனித உரிமைகளை வாழவிடுங்கள்!!!

*பூ.நளாயினி*
**62/01 அன்னசத்திரலேன்,**
**கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு குருவி

சிட்டுக்குருவி மனது
சிறகடிக்கும் வயது
சின்னஞ்சிறார் எம்மை
சிந்திக்காமல் வதைக்கும்
பெரியமனம் படைத்த
பெரியோரே!

உரிமைகள் மறுத்து
உணர்வுகள் மரித்து
எமக்கென்ற சிரிப்பினை
எம்மிடம் பறித்து
சிறையிடலாமா?
கல்விக்காய் கனகதைபேசி
விழிப்பூட்டும் கல்விமானே
உன்வீட்டில் வேலையானாய்
வருந்தி வலிக்கும் எமக்கும்
ஆசையுண்டு
பள்ளி செல்ல
ஊருக்கு உபதேசமா
உனக்கில்லையா

உன் மகனின்
பாதணிகளை துடைக்கும்
எமக்கும் அவன் வயதுதானே
இருந்தும் ஏன்
எமக்கு மட்டும்.....?

சிறகுகள் ஒடிந்து
விருப்புக்கள் இருண்டு
கனவுகள் கரியாகிறதே.....
காக்கைக்கும் கவிதைக்கும்
சுதந்திரம்
அவனுக்கும் அவளுக்கும்
சுதந்திரம்
இவனுக்கும் இவளுக்கும்
சுதந்திரம்
எமக்கு மட்டுமில்லையே....
கற்கண்டுத் தமிழில்
'அ' 'ஆ' சொல்லிடும் உரிமை
ஒரே ஒரே முறை
எம்மைப் பாருங்கள்
கெஞ்சுகின்றோம் உம்மை



சி. அகிலன்
கரணவாய்,
கரவெட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதங்காட்டு தோழா!

வாழும் உரிமை
எல்லோர்க்குமுண்டு
தோளை நிமிர்த்து தோழா
வீழும் மனிதம்
விழுதாய் மாற
விருட்சமாகு தோழா!

கருத்துரிமை
எல்லோர்க்குமுண்டு
கண்டு கொள்ளு தோழா
மறுத்து இதனை
மாளவைப் போர்
மனதை வெல்லு தோழா!

கைதுகளும்
எல்லோர்க்குமுண்டு
காலமது தோழா

கொய்து போடும்
கொடிய கரங்களுக்கும்
மனிதங் காட்டு தோழா!
புதைகுழிகள்
எல்லோர்க்குமுண்டு
புரிந்து கொள்ளு தோழா
புதைந்து போன
உயிர்களுக்காய்
நீதிதேடு தோழா!

இயல்பு நிலை
எல்லோர்க்குமுண்டு
இதனை நம்புதோழா
அயலிலுள்ள
மனிதர்களை நீ
அன்பு செய்வாய் தோழா!



சூரியநிலா,
ஈச்சமோட்டை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தத்துவவாதிகள் இதுவரைக்கும் வேறு வேறு தத்துவங்கள்
உலகைப்பற்றி தந்திருக்கின்றார்கள்
ஆனால்......
உலகை மாற்றத்திற்குக் கொண்டு வருவதுதான் தேவையானது.

-கார்ல் மார்க்ஸ்-
(1845)

Harikanan Printers,424,K.K.S Road, Jaffna.
T.P:021-2222717

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org